People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org
Web: www.pwtn.org

**26.3.2011**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்**
**தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்**
**அண்ணாசாலை**
**சென்னை 60002**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு**

**மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.**

**மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 15 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.**

**எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 19.3.2011 முதல் 25.3.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.**

**19-3-2011 முதல் 25-3-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | 1 |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 17 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 1 |
| 5. | வகுப்பறை வன்முறை | 4 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | – |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 1 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | – |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | – |
| 11. | குழந்தை திருமணம் | 1 |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 4 |

| | | |
|---|---|---|
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | – |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | – |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | – |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 3 |
| 17. | மணல் கொள்ளை | – |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | – |
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | – |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | 1 |
| 22. | பொதுவானவை | 2 |
| | மொத்தம் | 35 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்



(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்:

தமிழகத் துணை முதல்வர்

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் – தொகுப்பு-12
## 19.3.2011 முதல் 25.3.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 851. | 8.3.2011 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோடு எஸ்ஜி வலசைச் சேர்ந்த மணிவண்ணன் மகள்சாந்தினி(19). தனியார் கல்லூரியில் ஆடை அலங்காரதுறை இரண்டாம் துறை மாணவி. கல்லூரி பேராசிரியர்மாணவியை தரக்குறைவாக பேசியதால் மனமுடைந்த மாணவி தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | வித்யாசாகர் |
| 852. | 8.3.2011 | **நீலகிரி மாவட்டம்:** நீலகிரி குன்னூரைச் சேர்ந்த ராணி என்கிற லூர்துமேரி(37). கோவை சிங்காநல்லூர் காமராஜர்ரோடு கஸ்தூரிபாய் காந்திநகரில் வசிக்கும் ராணுவ வீரர் மகேஷ்வரன் (37) ஏற்கனவே திருமணமானவர் என்பதை மறைத்து லூர்துமேரியை ஏமாற்றி இரண்டாம் திருமணம் செய்ததோடு தன்னுடைய நகை மற்றும் பணத்தை பறித்துக் கொண்டதாக மகேஷ்வரன் வீட்டு முன்பு லூர்துமேரி மறியல் போராட்டம். | பெண்கள் மீதான வன்முறை | வித்யாசாகர் |
| 853. | 9.3.2011 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சியை அடுத்த சிங்காநல்லூர் அருகேயுள்ள அகிலாண்புரத்தைச் சேர்ந்த ராமசாமி மனைவி வெங்கடேஸ்வரி(30). குடும்பத் தகராறில் மனமுடைந்த வெங்கடேஷ்வரி விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | வித்யாசாகர் |
| 854. | 10.3.2011 | **ஈரோடு மாவட்டம்:** பண்ருட்டி அடுத்துள்ள பணப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த மணி மகன் லட்சுமணன்(19), பக்தவச்சலம்(17), ராஜீகாந்தி(19), பிரகாஷ்(17). ஈரோடு சித்தோடு அடுத்துள்ள தயிர்பாளையத்தில் உள்ள தனியார் நூற்பாளை நிறுவனத்தில் பணிபுரிந்தனர். ரூ. 5 ஆயிரம் திருடியதாக நூற்பாலை நிர்வாகிகள் தொழிலாளர்கள் நான்குபேரையும் | தொழிலாளர்கள் மீதான வன்முறை | வித்யாசாகர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அடித்து சித்திரவதை | | |
| 855. | 10.3.2011 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சியை அடுத்த நல்லாம்பள்ளியைச் சேர்ந்த ஜோதிமுருகன்(32) மனைவி மகேஸ்வரி(29). மகேஸ்வரியின் பெற்றோரிடம் இருந்து பணம் வாங்கிவருமாறு கணவர் துன்புறுத்தியதாகவும் வாங்கி வர மறுத்த மனைவியை பெட்சீட்டை வைத்து அழுத்தி கொலை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | வித்யாசாகர் |
| 856. | 10.3.2011 | **கோவை மாவட்டம்:** கோவை சரவணம்பட்டியில் உள்ள ஒரு தனியார் மெட்ரிக் பள்ளியில் அரசு நிர்ணயித்ததைவிட கூடுதலாக பணம் வசூலித்ததாகவும் பணம் கட்ட மறுத்த மாணவர்களை பள்ளி நிர்வாகம் வெயிலில் நிறுத்தியதாக பள்ளி நிர்வாகம் மீது மாணவ, மாணவியர்களின் பெற்றோர் புகார். | வகுப்பறை வன்முறை & கூடுதல் கல்விக் கட்டணம் | வித்யாசாகர் |
| 857. | 10.3.2011 | **அரியலூர் மாவட்டம்:** மேலூரைச் சேர்ந்த முருகன் மகள் சுதா(19). சுதாவுக்கு பெற்றோர் மாப்பிளை பார்த்தனர். சுதா திருமணத்திற்கு மறுத்ததால் பெற்றேர் மகளிடம் பேச மறுப்பு. மனமுடைந்த சுதா தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | வித்யாசாகர் |
| 858. | 11.3.2011 | **திருப்பூர் மாவட்டம்:** திருப்பூர், பெருமாநல்லூர் ரோடு, சாந்தி தியோட்டர் பகுதியில் செயல்பட்டு வரும். தனியார் பள்ளியில் கூடுதல் கட்டணம் வசூலிப்பதாக பெற்றோர் சாலை மறியல். | கூடுதல் கல்விக் கட்டணம் & வகுப்பறை வன்முறை | வித்யாசாகர் |
| 859. | 13.3.2011 | **கோவை மாவட்டம்:** கோவை ராம்நகரைச் சேர்ந்த சதீஷ்குமார்(33) மனைவி சந்திரகலா (31). திருமணமாகி 4 ஆண்டுகள் ஆன நிலையில் கூடுதல் வரதட்சணைக் கேட்டு கணவர் மற்றும் குடும்பத்தினர் துன்புறுத்தியதாக சந்திரகலா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணை கொடுமை | வித்யாசாகர் |
| 860. | 13.3.2011 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சியை அடுத்த ஆனைமலை பெரியபோது அருகேயுள்ள ராமச்சந்திராபுரத்தைச் சேர்ந்த செல்வராஜ் மனைவி மோகனா(35). கணவன் மனைவி குடும்பத் தகராறில் தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | வித்யாசாகர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 861. | 13.3.2011 | **கோவை மாவட்டம்:** கோவை அரசு சட்டக்கல்லூரியில், மாணவிகளை தரக்குறைவாக பேசிய பேராசிரியை தாமரைச்செல்வியை பணி நீக்கம் செய்யக்கோரி மாணவர்கள் போராட்டம். | மாணவிகள் மீதான வன்முறை | வித்யாசாகர் |
| 862. | 15.3.2011 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சி அடுத்த தொப்பம்பட்டியைச் சேர்ந்த நாச்சிமுத்து மனைவி கீதா(40). கோவை மத்தியசிறையில் அடைக்கப்பட்டிருந்த கீதா சிறையில் மரணம். . | சிறைக்கைதி மரணம் | வித்யாசாகர் |
| 864. | 19.3.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் தாலுகா, நேசநேரியைச் சேர்ந்த பாண்டி(25) மனைவி சூரியலதா. கணவர் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதால் மனமுடைந்த சூரியலதா தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |
| 865. | 19.3.2011 | **மதுரை மாவட்டம்:** பி.முத்துலிங்கபுரம் கிராமத்தைச் சேர்ந்த கோபால்சாமி (38) மனைவி பாண்டியம்மாள். கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த பாண்டியம்மாள் விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |
| 866. | 19.3.2011 | **சேலம் மாவட்டம்:** ஆத்தூர் நகர திமுக பொருளாளரும், முன்னாள் கவுன்சிலருமான ராஜேந்திரன் 340மூடை ரேசன் அரிசி கடத்தியதாக கைது. | ரேசன் அரிசி கடத்தல் | ஜனசக்தி |
| 867. | 19.3.2011 | **மதுரை மாவட்டம்:** ஒத்தக்கடை புதுதாமரைபட்டியைச் சேர்ந்த நாகஜோதி(17)யை அதே பகுதியைச் சேர்ந்த புலி(21) அவரது நண்பர்கள் கடத்திச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தமிழ்சுடர் |
| 868. | 20.3.2011 | **மதுரை மாவட்டம்:** வாடிப்பட்டி அருகே தனியார் மில்லில் பதுக்கிய 10 மூடைகளில் 500 கிலோ ரேசன் அரிசி பறிமுதல் . | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 869. | 20.3.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள மாநகராட்சி கழிப்பட செப்டிக் டேங்கை சுத்தம் செய்ய கண்ணன் 17.3.11 மரணம். மாவட்ட நிர்வாகத்தை கண்டித்து தொழிலாளர்கள் | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கண்டனம். | | |
| 870. | 20.3.2011 | **தர்மபுரி மாவட்டம்:** முத்துகவுண்டன்கொட்டாய் அரசு நடுநிலைப் பள்ளியின் கணித ஆசிரியர் சின்னசாமி(43). வகுப்பறையில் சில்மிஷம் செய்ததாக சின்னசாமி மீது மாணவிகளின் பெற்றோர் புகார். சின்னசாமி கைது. | வகுப்பறை வன்முறை & குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 871. | 21.3.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரையில் அதிகாரிகள் தல்லாகுளம் மெயின் ரோட்டில் வாகனசோதனையில் ஈடுபட்டபோது அந்த வழியாக வவந்த லாரியில் இருந்த 340மூடை ரேசன் அரிசி பறிமுதல். லாரி டிரைவர் கண்ணன்(32), கிளீனர் ஜெயக்குமார்(42) கைது. | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 872. | 21.3.2011 | **கடலூர் மாவட்டம்:** சிதம்பரம் அடுத்த சேத்தியாத்தோப்பு பெரியநற்குணம் கிராமத்தைச் சேர்ந்த ரானு மகள் ராதிகா(16) வாய் பேச முடியாத இவர் சிவசக்தி நகரில் மாற்றுத்திறனாளிகள் விடுதியில் தங்கி படித்து வந்தார். உடன் விடுதியில் தங்கியிருந்த மாணவன் ராதிகாவை பாலியல் பலாத்காரம். | மாற்றுத்திறனாளிகள் மீதனா பாலியல் வன்முறை & பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 873. | 21.3.2011 | **திருச்சி மாவட்டம்:** தஞ்சை கீழவாசலைச் சேர்ந்த இம்தியாஸ்அகமது மனைவி பர்ஜானா(26) மகள் அக்ஷா(4). உறவினர் திருமணத்திற்கு தனது மகளுடன் திருச்சி வந்த பர்ஜானா திருமண மண்டபத்தில் விளையாடிக் கொண்டிருந்த அக்ஷாவை ஆட்டோ டிரைவர் உஸ்மான் கடத்தியதாக கைது. | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | தினத்தந்தி |
| 874. | 22.3.2011 | **தேனி மாவட்டம்:** கம்பம் கே.கே. பட்டி ரோட்டில் உள்ள பெட்ரோல் பல்க் உரிமையாளர் மாடசாமி தனது வீட்டில் பெங்களூரைச் சேர்ந்த 3 பெண்களை வைத்து பூஜை நடத்துவதாக ஏமாற்றி பாக்யா, ரூபா, கல்பனா மூவரையும் தவறான வழியில் நடத்த முயன்றதாக மாடசாமி உட்பட நான்குபேர் கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தீக்கதிர் |
| 875. | 22.3.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை செல்லூர் கீழதோப்பைச் சேர்ந்த | பெண்கள் மீதான | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செல்வம் மனைவி சரிதா(30) மகன் மணிகண்டன்(10). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த செல்வம் சரிதா மற்றும் மகனை கொலை செய்ததாகக் கைது. | வன்முறை & குழந்தைக் மீதான வன்முறை & கொலை | |
| 876. | 23.3.2011 | **சென்னை மாவட்டம்:** வளசரவாக்கம் ஆழ்வார்திருநகரில் வசிப்பவர் சாய்திவ்யா(33). நங்கநல்லூர் என்ஜிஓ காலனியைச் சேர்ந்த ஸ்ரீராம்சர்மா(35) இருவரும் காதலித்தனர். திருமணம் செய்துக் கொள்வதாக கூறி திருமணமண்டபத்தில் தாலி கட்டும் நேரத்தில்ரூ. 30 லட்சம் பணத்துடன் ஸ்ரீராமை மாயம். சாய்திவ்யா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 877. | 23.3.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** திண்டிவனம்–விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலையில் சாலையோர பணியில் ஈடுபட்ட ஆந்திராவைச் சேர்ந்த ஒரு பெண்ணை சென்னையைச் சேர்ந்த பஷீர் கடத்திச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தமிழ்சுடர் |
| 878. | 23.3.2011 | **மதுரை மாவட்டம்:** முடக்குச்சாலை இந்திராணி நகரைச் சேர்ந்த நடராஜன் மனைவி பாக்கியலட்சுமி(49). வீட்டில் தனியாக இருந்த பாக்கிலெட்சுமியை தாக்கி, நகையைக் கொள்ளையடிக்க முயற்சி. கயாமடைந்த பாக்கியலெட்சுமி மருத்தவமனையில் சிகிச்சை. | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 879. | 24.3.2011 | **கோவை மாவட்டம்:** கோவை கணபதியில் உள்ள அரசு பள்ளியில் + 2 பயிலும் 17 வயதுள்ள மாணவி சுகன்யா. பழைய பொருட்கள் வாங்கிவிற்கும் சங்கரன் தனது மனைவி முருகேஸ்வரியை கட்டாயப்படுத்தி, மிரட்டியதோடு மாணவி சுகன்யாவை சித்திரவதை, செய்து இரண்டாம் திருமணம் செய்ய முயற்சி. | குழந்தைத் திருமணம் | டெக்கான் கிரானிக்கல் |
| 880. | 24.3.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** கொடைக்கானல் செயின்ட் மேரீஸ்ரோடு பகுதியில் வசிக்கும் தொழிலதிபர் ரேட்லேண்ட் ஜெபராஜ் மனைவி இவான்சுலின். தனியாக | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இருந்த இவான்சுலினை கட்டிப்போட்டு நகைகளை கொள்ளையடித்துச் சென்றதாக இவான்சுலின் புகார். | | |
| 881. | 24.3.2011 | **மதுரை மாவட்டம்:** திருச்செங்கோடு அருகே உள்ள வட்டூர்கணக்கம் பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளியின் ஆசிரியர் கலைமணி. வகுப்பறையில் தனது பணத்தை காணவில்லை மாணவி சர்மிளாவை பிரம்பால் அடித்ததோடு, மாணவர் சதீஷின் கையில் கற்பூரத்தை எரியவிட்டு சித்திரவதை. | வகுப்பறை வன்முறை | தினத்தந்தி |
| 882. | 24.3.2011 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள கரைவளந்தான்பட்டியைச் சேர்ந்த நாராயணசாமி மகள் வசந்தி(16) தனியார் பள்ளியில் +1 படிக்கும் வசந்தியை காணவில்லை என பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 883. | 25.3.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி மாவட்ட ஆட்சியர்அலுவலக வளாகத்துக்கு வேட்பு மனு தாக்கல் செய்ய வந்திருந்த திமுக, அதிகமுகவினரிடையே மோதல். போலீஸ் தடியடி. | காவல் நிலையச் சித்திரவதை | தினமணி |
| 884. | 25.3.2011 | **மதுரை மாவட்டம்:** விக்கிரமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு சப்–இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் செக்கானூரணி சோதனைச் சாவடியில் பணியில் இருந்தபோது வாகனங்களை சோதனையிட்டு விடுவிக்க பணம் லஞ்சமாக பெற்றுள்ளதாகப் புகார். | லஞ்சம் | தினமணி |